Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 031 | வெள்ளிக்கிழமை Friday | 01.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# “தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக திமுக என்றென்றும் திகழ்ந்திடும்” முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு



சென்னை: "உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும்," என்ற உறுதியை அளிக்கிறேன் என முதல்வர் மு.க .ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "உழைப்பு என்பது மனித இனத்தின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, அதன் அரசியல், சமூகப் பரிணாமத்திற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கும் உந்து சக்தியாகும். உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்குஎனதுஉழைப்பாளர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காகமேநாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மே தினப் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கழக ஆட்சிதோறும் செய்து வந்திருக்கிறோம்.

'பெரியாரையும், அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நானும் கம்யூனிஸ்டாகத்தான் ஆகி இருப்பேன்' என்று சொன்னவர்கருணாநிதி. அவர் தலைமையில் ஆட்சி அமைந்த போதெல்லாம் தொழிலாளர் நலம் காக்கஎண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியது வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னிக் கொண்டிருக்கிறது.

அந்த வழித்தடத்தில்தான் திராவிட மாடல் அரசிலும், இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். கழனியிலும் தொழிற்சாலைகளிலும் பாடுபடும் உழைப்பாளத் தோழர்களின் நலன்களைப் பாதுகாப்பது போலவே, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் புதிய ஆட்டோ ரிக்சா வாங்க மானியம், பதிவுபெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி, அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறோம்.

அதோடு, இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடவும் நலவாரியம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவு செய்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதியதாக e-Scooter வாங்க மானியம் வழங்கும் புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி சாதனைகள் பல படைத்தும், பாட்டாளி மக்களின் உயர்வுக்கு நாம்கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தும் விதமாகவும், "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக்கைவிலங்குகளைத் தவிர எதுவுமில்லை" என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்ஸுக்கு சென்னையில் சிலை அமைத்துள்ளோம். இப்படி, சொல்லாலும்–செயலாலும் – வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றுகிறோம்.

உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும் என்ற உறுதியையும், உழைக்கும் தோழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வேன் கவிழ்ந்து கோர விபத்து: குழந்தைகள் உட்பட 16 பேர் உயிரிழப்பு; 20 பேர் காயம்



தார்: மத்தியப் பிரதேசத்தின் திர்லா பகுதியில் பிக்கப் வேன் ஒன்று, கார் மீது மோதி கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் குழந்தைகள் உட்பட 16 உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மத்தியப்பிரதேசமாநிலம் தார் மாவட்டத்தில் புதன்கிழமை (ஏப்ரல் 29) இரவு இந்த விபத்து நிகழ்ந்தது. திர்லா காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட சிக்லியா என்ற இடத்தில் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் உள்ளது. இந்த பங்க்கின் அருகே இரவு 8.30 மணியளவில் பிக்கப் வேன் சுமார் 35 தொழிலாளர்களையும், அவர்களது குழந்தைகளையும் ஏற்றிக் கொண்டு அம்ஜேரா நோக்கி சென்று கொண்டிருந்தது. அதிவேகமாக சென்ற அந்த வேன், எதிரே வந்த கார் மீது மோதியதில் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்தது.

விபத்தை பார்த்த பயணிகளும், அக்கம்பக்கத்தினரும் உடனடியாக ஓடி வந்து, வேனின் அடியில் சிக்கியிருந்தவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அதற்குள் சிலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும் இந்த சம்பவம் குறித்து திர்லா காவல் நிலையத்துக்கு தகவல் அளிக்கப்பட்ட நிலையில், உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த போலீசாரும் மீட்புக் குழுவினரும் காயமடைந்தவர்களை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் தார் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பலர் சாலையிலேயே இறந்து கிடந்த நிலையில், சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த விபத்தை நேரில் பார்த்த பொதுமக்கள், பலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், இறந்தவர்களின் சடலங்கள் சாலையில் சிதறிக் கிடந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

தார் மாவட்ட மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு தலைவர் டாக்டர் சத்யபால் கூறுகையில், "இந்த விபத்தில் 2 குழந்தைகள் உட்பட 12-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த 3 பேர் உயர்சிகிச்சைக்காக இந்தூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்" என்றார்.

விபத்து குறித்து மாவட்ட பொறுப்பு ஆட்சியர் அபிஷேக் சௌத்ரி கூறுகையில், "பிக்கப் வாகனத்தில் அதிகஎண்ணிக்கையில் தொழிலாளர்கள் பயணம் செய்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 16 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் 3 பேர் இந்தூருக்கு மேற்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்" என்றார்.

மேலும், உயிரிழந்தவர்களின் விவரம் குறித்து இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை எனவும், காயமடைந்த பலர் கவலைக்கிடமாக இருப்பதால், உயிரிழப்புகள் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# சாத்தான்குளம் வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரும் ஜூன் 1க்குள் மேல்முறையீடு செய்யலாம்: ஐகோர்ட் உத்தரவு

மதுரை: சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் தூக்குதண்டனைவிதிக்கப்பட்ட போலீஸார் 9 பேரும் ஜூன் 1-க்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாத்தான்குளம் ஜெயராஜ், அவர் மகன் பென்னிக்ஸ் ஆகியோர் கடந்த 2020ல் கரோனா ஊரடங்கு அமலில் இருந்த போது சாத்தான்குளம் போலீஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர். இதுதொடர்பாககொலை வழக்கு பதிவு செய்து அப்போதைய காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், மேலும், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமை காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோரை சிபிஐ கைது செய்தது.

இந்த வழக்கை மதுரை மாவட்ட நீதிமன்றம் விசாரித்து ஸ்ரீதர் உட்பட 9 பேருக்கும் தூக்குதண்டனை விதித்தது. தூக்கு தண்டனையை உறுதிப்படுத்தக்கோரி தமிழக அரசு மற்றும் சிபிஐதரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்யப்பட்டது.



இந்த மனுக்கள் நீதிபதிகள் ஆனந்த் வெங்கடேஷ், ராமகிருஷ்ணன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. ஸ்ரீதர் உட்பட 9 பேரும் சிறையில் இருந்தபடி காணொலி வாயிலாக நீதிமன்றத்தில் ஆஜராகினர். அப்போது நீதிபதிகள், 9 பேரிடமும் வழக்கறிஞர்கள் நியமனம் செய்துள்ளீர்களா? எனக் கேட்டார். அதற்கு, அடுத்த விசாரணைக்குள் வழக்கறிஞர் நியமித்துவிடுவோம் என பதிலளித்தனர்.

இதையடுத்து சிபிஐ மேல்முறையீடு மனுவின் நகலை குற்றவாளிகளுக்கு வழங்க பதிவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். முதல் குற்றவாளியான ஸ்ரீதர், மேல்முறையீட்டு மனுவை தயார் செய்ய 15 நாள் விடுப்பு வழங்குமாறு கோரிக்கை வைத்தார். அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், மேல்முறையீடு மனு தயாரிக்க சிறைத்துறை போதிய வசதிகளை செய்து தரும்.

சிறையில் அனைத்து வசதிகளும் உள்ளது. எனவே விடுமுறை தேவையில்லை என்றனர்.

தொடர்ந்து நீதிபதிகள், இந்த வழக்கு தமிழகம் முழுவதும் உற்றுநோக்கப்படும் வழக்காகும். எனவே, ஜூன் 1-க்குள் மேல்முறையீடு மனுக்களை தாக்கல் செய்யுங்கள். ஜூன் 4 முதல் தினமும் விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். விசாரணை ஜூன் 4-க்கு ஒத்திவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# தமிழகத்தின் 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, (மே1) தமிழகத்தின் 10 முக்கிய மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் இன்று இடி,மின்னலுடன்கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோடை வெயிலின் தாக்கத்தால் தவித்து வரும் இந்த மாவட்ட மக்களுக்கு இந்த மழை ஒரு பெரும் ஆறுதலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



அடுத்தகட்டமாக நாளைய (மே 1) வானிலை நிலவரம் குறித்தும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஈரோடு,நீலகிரி,கோவை, திருப்பூர், திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய 6 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலத்த சூறைக்காற்று வீசக்கூடும் என்பதால் மரங்கள் மற்றும் மின் கம்பங்களுக்கு அடியில் ஒதுங்குவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |


தொடர்புக்கு : ☎ +919444082959

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### தூத்துக்குடியில் வருகிற மே4ஆம் தேதி நடைபெற உள்ள

# சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை குறித்து கலெக்டர் விஷூ மகாஜன் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடந்தது



நடைபெற்று முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026–க்கான வாக்கு எண்ணிக்கை வருகின்ற மே 4–ம் தேதி நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு,வாக்குஎண்ணும் பணியில் ஈடுபட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் அவர்களதுபொறுப்புகள்குறித்த ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (29.04.2026) நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட தேர்தல்அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் தலைமை வகித்தார்.

வாக்கு எண்ணும் நாளன்று பின்பற்ற வேண்டிய பல்வேறு பணிகள் குறித்து அனைத்து ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கும் ஆட்சியர் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார். குறிப்பாக வாக்கு எண்ணும் மைய ஏற்பாடுகள், பொதுத் தொடர்பு மற்றும் மனிதவள மேலாண்மை, நுண் பார்வையாளர்களின் பணிகள் மற்றும் ஊடக மைய செயல்பாடுகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் விவிபேட் (VVPAT) சீல் வைக்கும் முறையை மேற்பார்வையிடுதல். வீடியோகிராபி, சிசிடிவி கண்காணிப்பு மற்றும் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியிடுதல், வாக்கு எண்ணும் மையத்தில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களை நியமித்தல், குடிநீர், சுகாதாரம், உணவு வழங்கல் மற்றும் போக்குவரத்து மேலாண்மை, தபால் வாக்குகள் எண்ணுதல் மற்றும் வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு இயந்திரங்களை பாதுகாப்பாக மாவட்டக் கிடங்கில் ஒப்படைத்தல், 213 முதல் 218 வரையிலான சட்டமன்றத் தொகுதிகளுக்கான மேற்பார்வை அலுவலர்களின் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி.மதன், மாவட்ட வருவாய் அலுவலர் மூ. குருச்சந்திரன்,தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் சி.ப்ரியங்கா, சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் சுகுமாறன், சிவசுப்பிர மணியன், சங்கரலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக (பொது) கல்யாணசுந்தரம்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஷீலா மற்றும் அரசுத் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# பெண்ணாடம் பிரளயகாலேஸ்வரர் கோயிலில் திருத்தேரோட்டம் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தேரை வடம் பிடித்து இழுத்தனர்

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே பெண்ணாடத்தில் உள்ள பிரளயகாலேஸ்வரர் கோயில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு திருத்தேரோட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பெண்ணாடத்தில் அமைந்துள்ளது அழகிய காதலி அம்மன் உடனுறை பிரளயகாலேஸ்வரர் திருக்கோயில். தேவார மூவர் மற்றும் சேக்கிழார் உள்ளிட்டோரால் பாடல் பெற்றதும், திருநாவுக்கரசருக்கு சூலை நோய் நீக்கி இடப முத்திரை பொறித்த சிறப்புக்குரியதுமான இத்திருக்கோயிலில், இந்த ஆண்டிற்கான சித்திரைப் பெருவிழா கடந்த ஏப்ரல் 21–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

விழா தொடங்கிய நாள் முதல் தினந்தோறும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா நடைபெற்று வந்தது. விழாவின் முக்கிய நிகழ்வான 9–ஆம் நாள் திருத்தேரோட்டம் புதன்கிழமை காலை நடைபெற்றது. காலை 6.00 மணி முதல் 7.30 மணிக்குள் திருத்தேர் வடம்பிடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பெண்ணாடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு பக்தி முழக்கங்களுடன் தேரை வடம்பிடித்து இழுத்தனர்.

மொத்தம் 12 நாள்கள் நடைபெறும் இந்தச் சித்திரைப் பெருவிழா, வருகிற மே 2–ஆம் தேதி சனிக்கிழமை நடைபெறும் வசந்த உற்சவத்துடன் நிறைவடைகிறது.

விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழுத் தலைவர் சு.கண்ணன், செயல் அலுவலர் கே.மகாதேவி, ஆய்வாளர் வெ.தமிழ்செல்வி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள், உபயதாரர்கள், கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் வேலைவாய்ப்பு தினம்

ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் நடப்பு கல்வியாண்டில் பல்வேறு வீஸஸ், சோகோ, அக்சஞ்சர்,எல்.டி.ஐமைண்ட் டிரி, ஜஸ்பே, ரீனோல்ட் நிசான், பிரேக்ஸ் இந்தியா, லூக்கஸ் டிவிஎஸ், ஸ்பிக் போன்ற 145 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள்



பன்னாட்டு மற்றும் தேசிய அளவிளான நிறுவனங்களின் மூலமாக வேலைவாய்ப்பு பெற்ற மாணவ மாணவிகளுக்கு பணிநியமன ஆணையினை வழங்கி அவர்களைப் பாராட்டும் பொருட்டு "வேலைவாய்ப்பு தினம்" இனிதே நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் துவக்க விழாவினை உலகளாவிய அளவில் செயற்கை நுண்ணறிவினை மையமாக கொண்டு சேவைகளை வழங்கி வரும் எல் & டி எம் நிறுவன வளாகத்தின் தலைவர் தியாகு தர்மலிங்கம் அவர்கள் சிறப்புவிருந்தினராகவும், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் கலந்துக் கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் வேலைவாய்ப்பு பெற்ற மாணவ மாணவிகளை வாழ்த்தி தலைமை உரையாற்றுகையில், நமது கல்வி நிறுவனங்களின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறைகளின் மூலம் இந்த கல்வியாண்டின் முடிவில் டாடா கன்சல்டன்சி சர்வருகை புரிவதற்கு வழிவகை செய்து, அதன் மூலம் 1735 மாணவர்கள் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளார்கள் என்பதனை மிகவும் பெருமிதத்துடன் கூறினார்.

இந்த தருணத்தில் வருடத்திற்கு 31 மற்றும் 21 இலட்சம் வருமானத்தில் வேலைவாய்ப்பினை பெற்ற மூன்று மாணவர்களான பி. கௌரிகா, மோஹினீஷ் மற்றும் ராகுல் ஆகியோரை பெரிதும் பாராட்டுவதற்கு கடமைப்பட்டுள்ளேன், இது சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவர்களின் அயராத உழைப்பிற்கு கிடைத்த வெற்றியாகக் கருதி, அதனை உங்களிடம் பகீர்ந்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

மேலும், இத்தகைய வெற்றிக்கு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பும் வழிகாட்டதலுமே முக்கிய காரணங்களாகும். ஆதலால், மாணவ செல்வங்களே சாதனைகளைத் தக்கவைக்க தங்களது உழைப்பினைக் கொடுங்கள், வாழ்க்கை தன் வசப்படும் என்று கூறி, மாணவ செல்வங்களுக்கும், பாடுபட்டஅவர்தம் பெற்றோர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து உற்சாகப்படுத்தினார்.

முன்னதாக நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி அவர்கள் பணி நியமனம் பெறும் மாணவ மாணவிகளையும் அவர்தம் பெற்றோர்களையும் வரவேற்று பேசினார்.

மேலும் இவ்விழாவில், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்கள் எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி ஏ.கே. வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்து வேலைவாய்ப்பினை பெற்ற மாணவ மாணவிகளுக்கும், அவர்தம் பெற்றோர்களுக்கும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் எல் & டி எம் நிறுவன வளாகத்தின் தலைவர் தியாகு தர்மலிங்கம் அவர்கள் பணிநியமன ஆணைக்கான உறுதி சான்றிதழ்களை மாணவர்களுக்கு வழங்கி பேசுகையில், வேலைவாய்ப்பினை பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் தனது வணக்கங்கள் மற்றும் வாழ்த்துகளைத் தெரிவித்தார். ஒவ்வொருவரும் தனது வாழ்க்கைப் பயணத்தில் இடைவிடாது தொடர்ந்து கற்றல், மென்மேலும் திறமையினை வளர்த்து கொள்ளுதல் மற்றும் பணியாளர்களுடன் நல்லதொரு இணக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளுதல் போன்றமூன்று விதமான செயல்பாடுகளைத் தவறாது கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதுபோல சிறிது காலம் கழித்து சிறந்த பிராண்ட தூதராக தாங்கள் பயின்ற இக்கல்லூரிக்கு வருகைப்புரிந்து அன்றைய காலத்தில் கல்வி பயிலும் மாணவர்களுடன் தனது அனுபவங்களை பகிர்ந்துக் கொள்ள முன்வர வேண்டும். இவை மாணவர்களின் மேம்பாட்டிற்கும். கல்லூரி மேம்பாட்டிற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று மாணவர்களிடம் எடுத்துரைத்தார்.

மேலும் ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கத்தினை மெருகேற்றி பலவழிகளில் அனுபவங்களைப் பெற்று உயர்ந்த பதவியினை தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்று மாணவர்களை வாழ்த்தினார்.

நிகழ்வின் முடிவில் நந்தாதொழில்நுட்பகல்லூரியின் முதல்வர் முனைவர் ச. நந்தகோபால் நன்றி கூறினார்.

விழாவினை சிறப்பான முறையில்ஏற்பாடுசெய்திருந்த வேலைவாய்ப்பு துறையின் ஒருங்கிருங்கிணை ப்பாளர்களும், விரிவுரையாளர்களுமான கே.வி. பிரபு. எஸ். சிவராமகிருஷ்ணன், திருவேங்கடசாமி, நவீன் மற்றும் குழுவினர்களை கல்லூரி நிர்வாகத்தினர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

# தேவகோட்டையில் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் விழா – சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஊக்கம்



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ளசேர்மன்மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு வருகை தந்தவர்களை ஆசிரியை முத்துமீனாள் வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். சிவகங்கை மாவட்ட வனத் திட்ட அலுவலர் சாந்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார். அவர் பேசுகையில், செடிகளை பாதுகாப்பாக வளர்ப்பது குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும்,கோடை விடுமுறையின்போது ஆண்டுதோறும் பள்ளிகளுக்கு சென்று மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளைவழங்கி, செடி வளர்ப்பை ஊக்குவித்து வருவதாக தெரிவித்தார்.செடிகளை நன்றாக வளர்க்கும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

கடந்த ஆண்டு வழங்கப்பட்ட மரக்கன்றுகளை மாணவர்கள் சிறப்பாக வளர்த்ததையடுத்து, இந்த ஆண்டும் அதே பள்ளி மாணவர்களுக்கு கன்றுகள் வழங்குவதில் மகிழ்ச்சி உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விழாவில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அவற்றை வீடுகளில் பாதுகாப்பாக வளர்க்கும் முறைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும், ஆசிரியர்கள் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை மாணவர்களின்வீடுகளுக்குசென்று செடிகளின் வளர்ச்சியை கண்காணித்து, சிறப்பாக வளர்க்கும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மரக்கன்றுகளை நன்றாக வளர்த்த மாணவர்களுக்கு சமீபத்தில் பரிசுகள் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஸ்ரீதர் மற்றும் வள்ளிமயில் மேற்கொண்டனர். இறுதியாக ஆசிரியை முத்துலெட்சுமி நன்றி தெரிவித்தார்.

# ஈரோடு மாவட்டத்தில் தேசிய தேர்வு முகமையால் (NTA) NEET (UG) 2026 தேர்வு




ஈரோடு மாவட்டத்தில் தேசிய தேர்வு முகமையால் (NTA) NEET (UG) 2026 தேர்வு 03.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று 13 தேர்வு மையங்களில் நடைபெற உள்ளது. இதில் 4271 தேர்வர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

தேர்வு மையங்களில் தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு அளவில் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தேர்வு மையங்களிலும் பேருந்துகள் நின்று செல்லும் வகையிலும் சிறப்பு பேருந்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், மருத்துவக்குழுக்கள், காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. தேர்வு எழுதும் மாணவர்கள் சரியான நேரத்திற்குள் தேர்வுக்கூடத்திற்கு செல்லுமாறும், தேசிய தேர்வு முகமை விதிமுறைகளை முழுமையாக கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வர்களின் அனுமதிச் சீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தேர்வு நாளான 03.05.2026 அன்று குறித்த நேரத்தில் மட்டுமே தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படுவர். மேலும், தேர்வர்கள் நுழைவாயிலில் முழு பரிசோதனைக்கு பிறகு தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.



தமிழ்நாட்டில் வெடிபொருள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் பட்டாசு பொருட்கள் ஆகியவற்றை இருப்பு வைத்து விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் இதர வெடிமருந்து நிறுவனங்கள் ஆகியவற்றில் விபத்துக்கள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு, நிலையான வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு தற்போது நிலவி வரும் அதீத வெப்ப அலையின் காரணமாக, வாணம் மத்தாப்பு தயாரிப்பு தொழிற்சாலைகளில் பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வெப்பநிலை அதிகமாக இருக்கும்காரணத்தால்இரசாயனகலவைதயாரித்தல் மற்றும் இரசாயன கலவை நிரப்புதல் போன்ற பணியினை மேற்கொள்ளக்கூடாது எனவும், மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்றவிவரம்தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# தஞ்சை அருகே விவசாய நிலத்திலிருந்து பழங்காலத்து சிலைகள் கண்டெடுப்பு



தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், மானம்பாடியில் உள்ள வயலில் இருந்து பழங்காலத்து சுவாமி சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

மானம்பாடி, பிரதான சாலையைச் சேர்ந்தவர் ஜோசப் மகன் அலக்ஸான்டர் (36). இவர், தனக்கு சொந்தமான வயலில் உள்ள வரப்பை வெட்டும்போது, அங்கு பழங்காலத்து சிலைகள் இருப்பதை கண்டறிந்தார்.

பின்னர், இது தொடர்பாக, அவர், கிராம நிர்வாக அலுவலர் லோகநாதனுக்கு தகவல் அளித்ததின் பேரில், அந்த இடத்திற்கு வந்த அவர், சுமார் ஒன்றரை அடி உயரம் கொண்ட யானை சிலை, 1, திருவாச்சி 1, சிறிய சுவாமி சிலைகள் 3, உடைந்த பானை 1 என மொத்தம் 6 எண்ணிக்கையில் உலோகத்தினாலான சிலைகளை சேகரித்தார். பின்னர், திருவிடை மருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து வட்டாட்சியர் சாந்தமீனாவிடம், அந்த உலோகச் சிலைகளை வழங்கினார்.

இது தொடர்பாக வருவாய்த் துறையினர் கூறியது: கண்டெடுக்கப்பட்ட சிலைகள் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள், இங்கு வந்து சிலைகளை சேகரித்துக் கொள்வார்கள். பின்னர், தொல்லியியல் துறையினர், சிலைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டபின், இந்த சிலைகள் குறித்து தெரிய வரும் எனத் தெரிவித்தனர்.

# திருப்பத்தூர் தொகுதியில் 6 கிராமங்களில் மறு வாக்குப்பதிவு கோரிய வழக்கு தள்ளுபடி



புதுக்கோட்டை: சிவகங்கை திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களில் மீண்டும் வாக்குப்பதிவு நடத்த கோரிய வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டைமாவட்டத்தில் உள்ள ஆர்.பாலகுறிச்சி, ஆர்.சீகம்பட்டி, ரெகுநாதபட்டி, வைரன்பட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட ஆறு கிராமங்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் 23ஆம் தேதி நடத்த தேர்தலில், இந்த கிராம மக்கள் யாரும் வாக்களிக்கவில்லை. இதனால், இந்த கிராமங்களில் மறு வாக்குப் பதிவு நடத்தக் கோரி, பாலகுறிச்சியை சேர்ந்த பாஜக பிரமுகர் லட்சுமணன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், திருப்பத்தூர் தொகுதியில் தங்கள் கிராமத்தை சேர்த்துள்ளதால், நிர்வாக உதவிகள் கிடைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஆறு கிராமங்களை புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் சேர்க்க கோரி, பல ஆண்டுகளாக மனுக்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டு ள்ளது.

இந்த தேர்தலில் 6 கிராமங்களைச் சேர்ந்த 2,012 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்பதால், இந்த ஆறு கிராமங்களுக்கும் மீண்டும் புதிதாக வாக்குப் பதிவு நடத்த வேண்டும் என மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, தேர்தலின் போது இந்த ஆறு கிராம மக்களை வாக்களிக்க விடாமல் யாரும் தடுக்கவில்லை. தேர்தல் முடிந்த பிறகு எப்படி வாக்களிக்க அனுமதிக்க முடியும் என கேள்வி எழுப்பி, இந்த வழக்கு செல்லதக்கதல்ல எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். திருப்பத்தூர் தொகுதியில் அமைச்சர் பெரிய கருப்பன் திமுக சார்பில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடதக்கது.

# ஆதார், பான் எண்ணைத் திருடி நூதன மோசடி: ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி செலுத்துமாறு ஓட்டுநருக்கு நோட்டீஸ்




சென்னை: ஜிஎஸ்டி ரூ.4.70 கோடி செலுத்த வேண்டும் என்று நோட்டீஸ் வந்ததால் கார் ஓட்டுநர் அதிர்ச்சி அடைந்தார். வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் கார் ஓட்டுநர் கமலநாதன் (36).

கடந்த 10 ஆண்டுகளாக திரு வேற்காடு அடுத்த புளியம்பேடு நூம்பல் பகுதியில் மனைவி, 2 குழந்தைகளுடன் வசித்து வருகிறார். இந்நிலையில், வேலூரில் உள்ள அவரது சொந்த வீட்டு முகவரிக்கு கடந்த பிப்ரவரி மாதம் ஜிஎஸ்டி அலுவலகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது.

அதில், கமலநாதன் ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக ஜிஎஸ்டி அலுவலகத்தை அணுகி விளக்கம் கேட்டுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் கமலநாதனின் ஆதார், பான் அட்டை விவரங்களை பயன்படுத்தி அவரது பெயரில் ஜிஎஸ்டி பதிவு செய்து, ஓசூர், திருப்பூரில் நிறுவனம் தொடங்கி தொழில் செய்து வந்துள்ளார். திருப்பூரில் கமல் என்டர்பிரைஸ் என்ற பெயரில் ஏற்றுமதி - இறக்குமதி நிறுவனம் நடத்தி வந்ததாகவும், பின்னர் அதை நிறுத்திவிட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து, ஜிஎஸ்டி அலுவலக அதிகாரிகள் மற்றும் அதைத் தொடர்ந்து, வானகரம் போலீஸார் அறிவுறுத்தியபடி, சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் கமலநாதன் நேற்று புகார் கொடுத்தார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறிய போது, "ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி வரி கட்ட வேண்டும் என்று எனக்கு நோட்டீஸ் வந்துள்ளது. எனது ஆதார், பான் விவரங்களைத் திருடி மோசடியில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

# 4 பேர் உயிரிழந்த நிலையில் நவி மும்பையில் தர்பூசணி விலை கடும் வீழ்ச்சி



மும்பை: தெற்கு மும்பையைச் சேர்ந்த அப்துல்லா டோகாடியா (40), அவரது மனைவி நஸ்ரின் (35), மகள்கள் ஆயிஷா (16) மற்றும் ஜைனப் (13) ஆகியோர் கடந்த சனிக்கிழமை இரவு வீட்டில் நடந்த உறவினர்கள் சந்திப்புக்குப் பிறகு தர்பூசணி பழம் சாப்பிட்டனர். அதன் பிறகு அனைவருக்கும் கடுமையான வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. சிகிச்சை பலனின்றி சில மணி நேரங்களிலேயே 4 பேரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு வெளியான பூர்வாங்க அறிக்கையில், உணவு நச்சு காரணமாக அவர்களின் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில், கோடை காலத்தில் தர்பூசணி அதிக அளவில் விற்பனையாகும் பழமாக இருந்தபோதிலும், ஆசியாவின் மிகப் பெரிய மொத்த விவசாய சந்தைகளில் ஒன்றான நவி மும்பை வேளாண் உற்பத்தி சந்தையில் (ஏபிஎம்சி) தற்போது அதன் தேவை திடீரென சரிந்துள்ளது. ஒரு கிலோ தர்பூசணி ரூ.5 முதல் ரூ.7 வரை மட்டுமே விற்கப்படுவதால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர். பொதுவாக, இதன் மொத்த விற்பனை விலை ரூ.10 முதல் ரூ.35 ஆகவும், சில்லறை விற்பனை விலை ரூ.30 முதல் ரூ.100 வரையிலும் இருக்கும்.



# பெங்களூருவில் கனமழை சுவர் இடிந்து 7 பேர் உயிரிழப்பு


பெங்களூரு: பெங்களூருவில் பெய்த ஆலங்கட்டி மழையால் பவுரிங் மருத்துவமனையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பெங்களூருவில் கடந்த இரு மாதங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில், நேற்று மாலை 5 மணியளவில் பலத்த இடி மின்னலுடன் ஆலங்கட்டி மழை பெய்தது. இதனால் சாலைகளிலும் ஐடி நிறுவனங்களிலும் சாலைகளில் பனிமழை பெய்தது போன்று காட்சியளித்தது. சிவாஜி நகர், கம்மனஹள்ளி, கிருஷ்ண ராஜபுரம், ராஜாஜி நகர், மெஜஸ்டிக், ஹெப்பால் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காற்றுடன் மாலை 7 மணி வரை கொட்டிய மழையால் ஆங்காங்கே சாலையோர மரங்களும் மின் கம்பங்களும் சாய்ந்தன.

பழமையான பவுரிங் மருத்துவமனையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. இதில் சாலையோர கடைக்காரர்களும், மழைக்கு ஒதுங்கியவர்களும் சிக்கிக் கொண்டனர். இந்த விபத்தில் ஒரு குழந்தை உட்பட 7 பேர் சம்பவ இடத்திலே உயிரிழந்தனர். இதுகுறித்து தகவலறிந்த போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மீட்பு பணிகளை முடுக்கி விட்டனர்.

முதல்வர் சித்தராமையா மழைபெய்துகொண்டிருந்தபோதே சம்பவ இடத்தை பார்வையிட்டார். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறியதுடன் உரிய நிவாரணம் அறிவிக்கப்படும் என்றார்.

# தமிழகத்துக்கு 2.5 டிஎம்சி காவிரி நீர் திறக்க வேண்டும்: கர்நாடக அரசுக்கு ஆணையம் உத்தரவு



புதுடெல்லி: காவிரியில் தமிழகத்துக்கு மே மாதத்தில் வழங்க வேண்டிய 2.5 டிஎம்சி நீரை திறக்க கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.


காவிரி மேலாண்மை ஆணையத்தின் 50-வது கூட்டம் அதன் தலைவர் எஸ்.கே.ஹல்தர் தலைமையில் நேற்று டெல்லியில் நடைபெற்றது. அதில் தமிழகம், கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் நீர்வளத் துறை அதிகாரிகள் காணொலி வாயிலாக பங்கேற்றனர். அப்போது கர்நாடகாவில் காவிரி நீர்ப் பிடிப்பு பகுதிகளில் அமைந்த 4 அணைகளின் நீர் மட்டம், நீர்வரத்து, வெளியேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் தமிழக அரசின் சார்பில், "கோடை காலம் என்பதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் குறைந்து வருகிறது.

உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி மே மாதத்தில் தமிழகத்துக்கு கர்நாடகா 2.5 டிஎம்சி நீரை திறந்துவிட வேண்டும். அந்த நீரை பிலிகுண்டுலு சோதனை நிலையத்தில் மே மாத இறுதிக்குள் கர்நாடக அரசு உறுதிப்படுத்த வேண்டும்" என வலியுறுத்தினார்.

இதை ஏற்றுகொண்ட ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தர், "தமிழகத்துக்கு 2.5 டிஎம்சி காவிரி நீரை கர்நாடகா திறந்து விட வேண்டும்" என உத்தரவிட்டார்.

# தெலங்கானா ஏரிக்கரையில் சிதறி கிடந்த ரூ.500 கள்ள நோட்டுகள்



கம்மம்: தெலங்கானா மாநிலம் கம்மம் மாவட்டம், லச்சாபுரத்தில் உள்ள ஏரிக்கரையில், நேற்று அதிகாலை 500 ரூபாய் நோட்டுகள் நாலாபுறமும் சிதறி கிடந்தன. இதனை பார்த்த அப்பகுதியினர் ஆச்சரியப்பட்டனர்.

இது குறித்து லச்சாபுரம் போலீஸாருக்கு தகவல் எட்டியது. உடனே போலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு சிதறி கிடந்த சுமார் 30 ஆயிரம் மதிப்புள்ள 500 ரூபாய் நோட்டுகளை சேகரித்து சோதித்து பார்த்தனர்.

அப்போது அவை அனைத்துமே கள்ள நோட்டுகள் என்பது தெரியவந்தது. யாரோ கள்ள நோட்டுகளை மாற்ற பயந்து, இங்குள்ள ஏரிக்கரையில் வீசி விட்டு சென்றுள்ளனர் என போலீஸார் கருதுகின்றனர். இது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





ஈரோடு மாவட்டம் பவானி கூடுதுறை சங்கமேஸ்வரர் கோவிலில் ஸ்ரீதேவி, பூதேவி உடனமர் ஆதிகேசவ பெருமாள் திருக்கல்யாணம் விமரிசையாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் சுவாமி எழுந்தருளினார். பக்தர்கள் 'கோவிந்தா கோவிந்தா' என கோஷமிட்டபடி தேரை வடம் பிடித்து இழுத்தனர். பவானி நகரின் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்த தேரை, திரளான பொதுமக்கள் வழிநெடுகிலும் நின்று தரிசனம் செய்து வழிபாடு நடத்தினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடுவீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி சென்னையில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# ஈரோடு மாவட்ட அரசு இசைப்பள்ளியில் மாணவ மாணவியர் சேர்க்கை நடைபெறவுள்ளது ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்






ஈரோடு மாவட்ட அரசு இசைப்பள்ளியில் மாணவ மாணவியர் சேர்க்கை (2026-2027) நடைபெறவுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளதாவது:

இசைப்பள்ளியில் சேருவதற்கு வயது வரம்பு 12 வயதுக்கு மேல் 25 வயதிற்குள் இருக்க வேண்டும். குரலிசை, பரதநாட்டியம், வயலின், மிருதங்கம் ஆகிய கலைகளுக்கு 7 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தவில், நாதசுரம் மற்றும் தேவாரம் ஆகிய கலைகளுக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் போதுமானது. இசைப்பள்ளி படிப்பின் கால அளவு மூன்று ஆண்டுகள் ஆகும். இசைப்பள்ளியில் பயலுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000/-கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

அனைத்து மாணவ மாணவியர்களுக்கு அரசு விடுதி வசதியும் செய்து தரப்படும். வெளி ஊர்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு இலவச பேருந்து கட்டண வசதியும் செய்து தரப்படும். மூன்று ஆண்டுகள் பயின்று அரசுத் தேர்வு இயக்ககம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் கர்நாடக இசைக் கச்சேரிகள் நடத்தவும்,நாதசுரம் மற்றும் தவில் வாசித்து தொழில் புரியவும், தேவாரம் பாடுதல் மற்றும் கோவில்களில் ஓதுவாராகப் பணிபுரியவும், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று திறமைகளை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் உள்ளன. திருகோவில்களில் தேவார ஓதுவார் பணியில் சேர்ந்திட இப்பள்ளியில் தேவார இசை பயின்று தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. கலை ஆர்வமுள்ள மாணவ மாணவிகள் அனைவரும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் ஈரோடு மாவட்ட அரசு இசை ப்பள்ளியில் மாணவ மாணவியர் சேர்க்கை (2026 - 2027) 02-05-2026 அன்று முதல் தொடங்கப்படுகிறது. விபரங்களுக்குதலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளி, பி.பெ. அக்ரஹாரம், பவானி ரோடு, ஈரோடு-638 001 என்ற முகவரியிலும், கைப்பேசி எண் -9487247205 (04242294365) தொடர்பு கொள்ளவும். இவ்வாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# மே 4ம் தேதி நாடே வியக்கும் அளவிற்கு விசில் சத்தம் கேட்கும்; செங்கோட்டையன் பேட்டி




சென்னை: மே 4 ஆம் தேதி நாடே வியக்கும் அளவிற்கு விசில் சத்தம் இருக்கும் என்று தவெக உயர்மட்ட நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.


தமிழகத்தில் கடந்த 23 ஆம் தேதி சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ளது. இதுவரை இல்லாத அளவில் 85.15% வாக்குகள் பதிவாகி உள்ளன. தமிழக தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக அதிகப்படியான வாக்குகள் பதிவாகி இருப்பதால் யார் வெற்றி பெறுவார்கள் என்ற எதிர்பார்ப்பானது மிகவும் அதிகமாக இருக்கிறது.

எப்போதும் தேர்தல் நடந்து முடிந்தநாளன்றே தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பானது வெளியாகி விடும். ஆனால் இம்முறை மேற்கு வங்க சட்டப் பேரவை தேர்தலுக்கான இறுதிகட்ட வாக்குப்பதிவானது நேற்று தான் நடைபெற்றதால், தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு நேற்று மாலை வெளியானது.

பல்வேறு செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பின்படி, தமிழ்நாட்டில் இந்த முறையும் திமுக கூட்டணி தான் பெரும்பான்மை இடங்களை கைப்பற்றி, ஆட்சியமைக்க வாய்ப்புள்ளது. அதே சமயம் ஒரு சில கருத்துக்கணிப்புகள் முதன்முறையாக தேர்தல் களம் கண்ட தவெக அதிக தொகுதிகளை கைப்பற்றும்என்று கூறியிருக்கின்றன.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழக உயர்மட்ட நிர்வாக குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், மே 4 ஆம் தேதி இந்தியாவேவியக்கும் அளவிற்கு விசில் சத்தம் கேட்கும் என்று கூறியிருக்கிறார். கோவை விமான நிலையத்திலிருந்து சென்னை சென்றஅவரிடம்,விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம், தமிழகத்தில் விசில் சத்தம் ஓரளவுக்குத்தான் இருக்கிறது என தமிழிசை சௌந்தரராஜன் கூறியிருப்பது பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், "விசில் சத்தம் இந்தியாவே வியக்கத்தக்க அளவிற்கு இருக்கும். இது ஒரு மிராக்கிள். உலக வரலாற்றில் இது போன்று விசில் சத்தம் கேட்க இருப்பது இதுவே முதல் முறையாகும்.விசில் சத்தத்தை 4 ஆம் தேதி பாருங்கள்" என்றார்.

விசில் சத்தம் பாம் சத்தம் போன்று இருப்பதாக சிலர் கூறுகிறார்களே என்று கேட்டதற்கு, "சிலருக்கு பாம் வைத்தே பழக்கம். நக்சைலைட் ஏரியாவில்" என்று சிரித்துக் கொண்டே சென்றார்.



ஈரோடு மாவட்டம், நம்பியூர் அருகே கெட்டிசெவியூரில் ஆண்டுதோறும் நடைபெறும் சுள்ளிக்கரடு மினியப்பிச்சி குருபூஜை சித்திரை திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் கிராம மக்கள் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து வந்த பக்தர்கள் திரளாக கலந்து கொள்ள மேல தாளத்துடன் வழிபாடு செய்தனர்.

# திருவண்ணாமலைக்கு படையெடுத்த மக்கள்; சென்னை புறநகரில் வரிசை கட்டி நின்ற வாகனங்கள்



சென்னை:சித்ராபௌர்ணமியை முன்னிட்டு மக்கள் திருவண்ணாமலைக்கு படையெடுத்தால், சென்னை புறநகர் பகுதியான பெருங்களத்தூர் முதல் வண்டலூர் வரை கடும் போக்குவரத்து நெரிசல் நிலவியது.

சித்ரா பௌர்ணமி நாளை (மே 1) கொண்டாடப்படவுள்ளது. இதற்காக, திருவண்ணா மலைக்கு மாநிலம் முழுவதும் இருந்து 2 நாட்கள் சிறப்புப் பேருந்துகள் மற்றும் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், சென்னை மற்றும் அதன் புறநகர்ப்பகுதியில் உள்ள மக்கள் திருவண்ணாமலையில் சித்ரா பௌர்ணமி கிரிவலம் செல்வதற்காக படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். போக்குவரத்து நெரிசல் அதற்காக, (ஏப்.30) காலை முதலே அதிகப்படியான மக்கள் புறப்பட்டதால், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் மக்கள் கூட்டம் அலைமோதியது. சொந்த வாகனங்களில் செல்பவர்களும் திருவண்ணா மலைக்கு புறப்பட்டுச் சென்றதால், பெருங்களத்தூரில் இருந்து வண்டலூர் வரை சுமார் 3 கி.மீ தூரம் வரை கடும் போக்குவரத்து நெரிசல் நிலவியது.

திருவண்ணாமலைக்கு சென்ற பக்தர்களும், வேலைக்குச் செல்வோரும், அரசு பேருந்துகளும் என ஒரே நேரத்தில் ஜிஎஸ்டி சாலையில் வந்ததால், அனைத்து வாகனங்களும் வரிசை கட்டி நின்றன. கடும் போக்குவரத்து நெரிசலில் சிக்கிய வாகனங்கள் பெருங்களத்தூரில் இருந்து வண்டலூர்வரைஊர்ந்துசெல்லும் நிலை ஏற்பட்டது. இதனால், நீண்ட நேரம் போக்குவரத்து நெரிசலில் காத்திருக்கும் பயணிகள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இதனால், போக்குவரத்தை சீர் செய்யும் பணியில் போக்குவரத்து காவலர்கள் ஈடுபட்டனர். மேலும், இன்று மாலையும் அதிகப்படியான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் திருவண்ணா மலைக்கு செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், கூடுதலாக போக்குவரத்து காவலர்களை நியமித்து, ஜிஎஸ்டி சாலையில் போக்குவரத்து நெரிசலை சரி செய்ய வேண்டும் என்று வாகன ஓட்டிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

தொழிலாளர் தினம், அடுத்து சனி மற்றும் ஞாயிறு வார விடுமுறை என தொடர் விடுமுறை காரணமாகவும், சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு பொதுமக்கள் குலதெய்வ கோயில்களுக்கு செல்ல உள்ளதாலும் தமிழக அரசு சார்பில் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் சேர்த்து கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

அதன்படி, இன்று கிளாம்பாக்கத்திலிருந்து திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய பகுதிகளுக்கு வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 475 சிறப்பு பேருந்துகளும், நாளை 315 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

அதே போல, கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்று 85 பேருந்துகளும், நாளை மற்றும் நாளை மறுதினம் தலா 75 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. மேலும், மாதாவரத்திலிருந்து பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்று 13,103 பயணிகளும், நாளை 3,950 பயணிகளும் சனிக்கிழமை 3,134 பயணிகளும்மற்றும்ஞாயிற்றுக்கிழமை 7,232 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளதாக அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்டம் தாளவாடி, பண்ணாரி நகரில் உள்ள பண்ணாரி அம்மன் கோவில் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் தீர்த்த குடம் எடுத்து நேர்த்தி கடன் செலுத்தினர். இந்த நிகழ்வில் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.



ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகர், கருங்கல்பாளையம், சுப்பையன் வீதி பகுதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ சமயபுரம் மாரியம்மன், ஸ்ரீ ராஜகணபதி, ஸ்ரீ துர்க்கை அம்மன், ஸ்ரீ கருப்பண்ணசாமி, ஸ்ரீ கன்னிமார் மற்றும் ஸ்ரீ முனியப்பன்சாமி திருக்கோவிலின் ஐந்தாம் ஆண்டு தீர்த்த திருவிழா மற்றும் திருவிளக்கு திருவீதி உலா விழாவில் சிறப்புஅழைப்பாளராகஈரோடுநாடாளுமன்றஉறுப்பினர்கே.இ.பிரகாஷ்கலந்துகொண்டுஇவ்விழாவினைசிறப்பித்தார்.

# New chapter for Hormuz, Gulf: Iran Supreme Leader's 'bottom of the water' warning for US



*In a message on National Persian Gulf Day, the Supreme Leader added that the Gulf region will have a "bright future" without the presence of the US.*

*Iran's Supreme Leader, Mojtaba Khamenei, on Thursday stated that a "new chapter" for the Gulf and the Strait of Hormuz is taking shape amid the ongoing war with the United States and Israel.*

*In a message on National Persian Gulf Day, the Supreme Leader added that the Gulf region will have a "bright future" without the presence of the US, state TV reported. In his written message, broadcast on state TV, the Supreme Leader added that Tehran would secure the Gulf region and eliminate "the enemy's abuses of the waterway."*

*Khamenei added that the new management of the Strait of Hormuz would bring calm, progress and economic benefits to all Gulf nations."Ninety million proud and honourable Iranians inside and outside the country regard all of Iran's identity-based, spiritual, human, scientific, industrial and technological capacities - from nanotechnology and biotechnology to nuclear and missile capabilities - as national assets, and will protect them just as they protect the country's waters, land and airspace," Khamenei wrote in his message.*

*The Iranian supreme leader added that the only place Americans belong in the Persian Gulf is "at the bottom of its waters."*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.